**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**.13**
**Defence**
**Court**

**Name** **: குட்டி மணி என்ற மணிகண்டன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 24.02.2022

முதல் விசாரணை:

நான் தென்காசியில் சிதம்பராஈஸ்வரர் கோயில் தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும்

தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

தென்காசியில் 2006 மற்றும் 2007 ம் ஆண்டில் பள்ளி வாசல் கட்டுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். இறந்துபோன குமார் பாண்டியனை தெரியாது. தமிழக முஸ்லீம் முன்னேற்ற கழகம் இருப்பது எனக்கு தெரியாது. தென்காசி கிளையின் பொறுப்பாளர்களை தெரியாது. அது தொடர்பாக எதிரிகளுக்கும் குமார்பாண்டியனுக்கும் பிரச்சனை இருந்தது பற்றியும் தெரியாது. குமார் பாண்டியன் குடும்பத்தினரை கொல்ல முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் திட்டம் தீட்டிவந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. சக்தி பாண்டியன் அறிவுரை படி குமார் பாண்டியன் குடும்பத்தினரும் நானும் என் நண்பர்களும் வெளியே செல்லும்போது தனியாக செல்லாமல் ஆயுதங்களுடன் செல்வதை வழக்கமாக கொண்டிருநதோம் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் கடந்த 14.08.2007 ம் தேதி காலையில் நான் எனது நண்பர்கள் சுரேஷ், மற்றும் சேகர் ஆகியோர் கூளக்கடை பஜார் சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது ஹனிபாவும் அப்துல்லாவும் அவர் கூட்டாளிகளும் ஆட்டோகளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அலாவுதீன் என்பவர் மோட்டார் சைக்கிளில் முன்னே சென்று கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் சக்திபாண்டியனின் தம்பி செந்தில்,சுரேஷ் கூட்டாளிகளுடன் ஓடிவந்தபோது அவர்களை ஹனிபா, அப்துல்லா,மற்றும் அவர்களது கூட்டாளிகளான நாகூர்மீரான், மீரான் மைதீன்,

ஹசன் கனி, நவாஸ், சையது அலி மேலும் சிலர் ஆயுதங்களுடன் விரட்டி தாக்கனிார்கள் என்றும் பதிலுக்கு நானும் என்னுடன் சேர்ந்தவர்களும் தாக்கினோம் என்றும் செந்தில், சுரேஷ் , சேகர் மற்றம் அவர் நண்பர்களும் பதில் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் சேகரை ஹனிபா அரிவாளால் வெட்டியும், அப்துல்லா, அரிவாளால் வலது முழங்கை மற்றும் இடது முழங்கையை வெட்டியும் அசன்கனி சேகரை வலது விளாலில் குத்தியும், இராஜா முகமது வலது காதுக்கு கீழ் வெட்டினார் என்றும் நான் அந்த சம்பவத்தில் இருந்தேன் என்றும் இதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே சம்பவத்தில் இறந்துபோன செந்திலை அலாவுதீன் அரிவாளால் இடது தலையில் பகுதியில் வெட்டினார் என்றும் சுரேசை செய்யது அலி பட்டா கத்தியால் வெட்டினார் என்றும்,சம்பவத்தின் தொடர்ச்சியாக சேகர், சுரேஷ் மற்றும் அசன் கனி சம்பவ இடத்தில் இறந்து போனார்கள் என்றும் செந்தில் என்ற செந்தில் குமார் என்பவரை மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும், என் மீதும் வழக்கு உள்ளது. அந்த வழக்கில் இருந்து தப்பிக்க எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் குடியிருக்கும் இடத்திற்கும் எதிரிகள் குடியிருக்கும் இடத்திற்கும் ஒரு

கிலோமீட்டர் துாரம் இருக்கும் என்றால் சரிதான். நான் வேண்டுமென்றே பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**